C.C. No.07/2020 Date :08.06.2026

PW1 – மாரிஸ்வரகுமார், த/பெ.பெரியசாமி

எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 317 இன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் 2015 முதல் 2020 வரை குமார் என்ற பெயரில் லேமினேசன் மற்றும் ஸ்கோரிங் வேலையினை சொந்தமாக பார்த்து வந்தேன். மேற்படி வேலை பார்ப்பதற்கான டின் நம்பர் அல்லது ஜிஎஸ்டி நம்பரை கூற முடியுமா என்றால், நான் பழைய மிஷின்களை சர்வீஸ் மட்டும் செய்து கொடுத்ததால் டின் நம்பர் அல்லது ஜிஎஸ்டி நம்பர் பெறவில்லை. நான் லேமினேசன் மற்றும் ஸ்கோரிங் வேலையினை செய்வதற்கு அரசிடம் பதிவு செய்து சான்று பெற்றுள்ளேனா என்றால் இல்லை. நான் எனது வழக்கறிஞர் அறிவிப்பு, புகார் மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் குமார் என்ற பெயரில் லேமினேசன் மற்றும் ஸ்கோரிங் வேலையினை சொந்தமாக பார்த்து வந்தேன் என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால், பெயர் மட்டும் குறிப்பிடவில்லை, லேமினேசன் மற்றும் ஸ்கோரிங் வேலை பார்த்ததாக கூறியுள்ளேன். நான் உண்மையில் லேமினேசன் மற்றும் ஸ்கோரிங் வேலை பார்க்கவில்லை என்றும், அதனால்தான் டின் அல்லது ஜிஎஸ்டி நம்பரை அளிக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரி எனக்கு எவ்வாறு அறிமுகமானார் என்றால், எதிரியும் லேமினேசன் மற்றும் ஸ்கோரிங் தொழில் செய்து வருகிறார். நானும் எதிரியும் ஒரே

இடத்தில் தொழிலுக்கான பொருட்களை வாங்குவோம் அந்த வகையில் எதிரி பழக்கமானார்.

2) நானும் எதிரியும் ஒரே இடத்தில் தொழிலுக்கான பொருட்களை வாங்கியதாக கூறப்படும் நிறுவனத்தின் பெயர் முகவரி கூறமுடியுமா என்றால், பழனியாண்டவர் தியேட்டருக்கு அருகில் உள்ள கார்த்திக் பிலிம் கம்பெனியில் பொருட்கள் வாங்குவோம். கார்த்திக் பிலிம் கம்பெனியில் பொருட்கள் வாங்குவதற்கு விலை ரசீதுகள் கொடுப்பார்களா என்றால் இல்லை. எதற்காக கார்த்திக் பிலிம் கம்பெனியில் விலை ரசீதுகள் கொடுப்பதில்லை என்றால், அங்கு குறைந்த விலையில் பழைய பொருட்களையும் வாங்குவோம், அதனால் விலை ரசீதுகள் கொடுப்பதில்லை. நான் இதுவரை கார்த்திக் பிலிம் கம்பெனியில் பொருட்கள் வாங்கும்போது அதற்கான விலை ரசீதுகள் பெற்றதேயில்லை என்றால், சரிதான். நான் கூறியபடி கார்த்திக் பிலிம் கம்பெனி என்ற ஒன்று உள்ளது என்பதை காட்டுவதற்கு மேற்படி கம்பெனிதாரர்களை எனது தரப்பில் சாட்சியாக விசாரிப்பதற்கு தயாராக இருக்கிறேனா என்றால், இருக்கிறேன். நான் கூறியவாறு கார்த்திக் பிலிம் கம்பெனி என்ற ஒரு நிறுவனமே இல்லை என்றாலும் அவ்வாறு இருப்பதாக வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

3) கார்த்திக் பிலிம் கம்பெனி என்ற பெயரில் நிறுவனமே இல்லை என்பதால் எதிரியை அங்கு வைத்து சந்திப்பதற்கு வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. எனக்கும் எதிரிக்கும் இடையே லேமினேசன் மற்றும் ஸ்கோரிங் தொழில் சம்மந்தமாக பரிவர்த்தனை ஏதும் இல்லை என்றால்,

சரியல்ல. எதிரிக்கு நான் மிஷின்களை சரிசெய்து கொடுத்துள்ளேன். எதிரி எனக்கு லேமினேசன் மற்றும் ஸ்கோரிங் வேலையும் கொடுத்துள்ளார். எதிரிக்கு நான் லேமினேசன் மற்றும் ஸ்கோரிங் வேலை செய்து கொடுத்ததாக கூறப்படுவதற்கு ஆதரவாக ஆவணங்கள் ஏதேனும் உள்ளதா என்றால், கூலிக்குதான் வேலை செய்து கொடுத்தேன். தனியாக அதற்கு ஆவணங்கள் எதுவும் இல்லை. எனது கம்பெனிக்கு வரும் வேலைக்கான விவரங்களை தினசரி குறிப்புகளில் எழுதி வைப்பது உண்டா என்றால், எழுதி வைத்துகொள்வேன். நான் வேலை தொடர்பாக பராமரித்து வருவதாக கூறும் தினசரி குறிப்புகளை பார்த்தால் எதிரி எனக்கு வேலை கொடுத்த விவரம் தெரியவரும் என்றால், எதிரிக்கு கூலிக்கு வேலை பார்த்து கொடுத்ததால் அந்த விவரம் அதில் எழுதப்பட்டிருக்காது. எதிரி எனக்கு வேலை கொடுத்ததில்லை என்பதாலும், நான் எதிரிக்கு வேலை செய்து கொடுக்கவில்லை என்பதாலும், அது குறித்த விவரங்களை நான் எழுதவில்லை என்றால் சரியல்ல.

4) நான் எதிரிக்கு எந்த வகையான வியாபார அபிவிருத்தி மற்றும் எந்த வகையான சில்லரை கடனை தீர்ப்பதற்கு பணம் கொடுத்தேன் என்று குறிப்பிட்டு எனது அறிவிப்பு, புகார், நிரூபண வாக்குமூலத்தில் கூறவில்லைஎ ன்றால் சரிதான். என்னிடம் 2015 – 2020 காலகட்டத்தில் நிரந்தர கணக்கு அட்டை (PAN CARD) இருந்ததா என்றால் இல்லை. 2015 – 2020 காலகட்டத்தில் எனக்கு பெரிய அளவில் தொழில் வருமானம் இல்லை என்பதால்தான் நிரந்தர கணக்கு

அட்டை நான் பெறவில்லை என்றால், அதுபற்றிய விவரம் எனக்கு தெரியாததால் எடுக்கவில்லை. 2015 – 2020 காலகட்டத்தில் எனக்கு தினசரி வருமானமாக ரூ.400 – ரூ.500 மட்டுமே கிடைக்குமென்றால், சிலசமயம் ரூ.1000/–, ரூ.2000/– கிடைக்கும். சில சமயம் குறைவான தொகையும் கிடைக்கும். 2015 – 2020 காலகட்டத்தில் சிவகாசி பகுதியில் அதிகமாக மின்வெட்டுகள் நடைமுறையில் இருந்தது என்றால், சரிதான். மின்வெட்டு இருந்த நாட்களில் 3 மணி நேரம் கூடுதலாக கம்பெனியில் இருந்து வேலை பார்ப்பேன். மின் வெட்டு காலகட்டத்தில் சில நாட்கள் வேலை இல்லாமல் இருக்குமென்றால், சரியல்ல, வேலை இருக்கும். 2019 இல் எனக்கு இரண்டு குழந்தைகள் இருந்தனர். எனது குழந்தைகள் இருவரும் விநாயகா மெட்ரிகுலேசன் பள்ளியில் படித்து வந்தனர். இரண்டு குழந்தைகளுக்கு மாதம் ரூ.1500/– பள்ளி கட்டணம் செலுத்தி வந்தேன். அந்த சமயம் நான் சொந்த வீட்டில் வசித்து வந்தேன்.

5) நான் எதிரிக்கு கொடுத்ததாக கூறப்படும் ரூ.5 லட்சம் தொகையினை எதிலிருந்து எடுத்து கொடுத்தேன் என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். நான் எதிரிக்கு கொடுத்ததாக கூறப்படும் ரூ.5 லட்சம் தொகையினை வருமானமாக ஈட்டியதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் நான் 1998 ஆம் ஆண்டு முதல் வேலை பார்த்து வருகிறேன். சிறுக சிறுக சேமித்த பணத்தினையும், எனது குழந்தைகளுக்காக சேமித்த பணத்தினையும் கொடுத்தேன். நான் பணத்தினை சேமித்து வைத்திருந்ததாகவும்,

சேமித்த பணத்தினை எதிரிக்கு கொடுத்ததாகவும் பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. 2016 காலகட்டத்தில் பணமதிப்பிழப்பு நடவடிக்கை எடுத்தபோது நான் சேர்த்து வைத்ததாக கூறப்படும் பணத்தினை வங்கியின் மூலம் மாற்றுவதற்கு நடவடிக்கை ஏதேனும் எடுத்தேனா என்றால், வங்கியின் மூலம் பணத்தினை மாற்றவில்லை. எனது தொழிலுக்கு தேவையான பொருட்களை வாங்கும்போது சேமிப்பு பணத்தினை பயன்படுத்தி கொண்டேன். நான் கூறுவது போல் சேமிப்பாக என்னிடம் பணம் இல்லை என்றாலும், அதனால்தான் வங்கியில் சேமிப்பு பணத்தினை கொடுத்து மாற்றவில்லை என்றால் சரியல்ல.

6) நான் எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிற்கு பதில் அறிவிப்பு கிடைக்கபெற்றது என்றால் சரிதான். எதிரி எனக்கு அனுப்பிய வழக்கறிஞர் பதில் அறிவிப்பில் சிவகாசி, அம்மன்கோவில்பட்டி நடுத்தெருவை சேர்ந்த செல்வகுமார் என்பவரிடம் 2012 ஆம் ஆண்டு ரூ.150000/- தொகையினை ரூ.100 க்கு வட்டி 3 வீதம் கடனாக வாங்கியதாகவும், அதனை திருப்பி செலுத்திவிட்டு 03.04.2015 ஆம் தேதி செல்வகுமாரிடம் ரூ.4 லட்சம் கடன் வாங்கியதாகவும் அப்போது கடனுக்கு ஆதரவாக 3 நிரப்பப்படாத காசோலைகளை கொடுத்ததாகவும், 17.05.2019 ஆம் தேதி கடனை திருப்பி செலுத்திவிட்டதாகவும், ஏற்கெனவே பெற்றிருந்த 3 யூகோ வங்கியின் காசோலைகளில் ஒரு காசோலைதான் அறிவிப்பில் கண்ட காசோலை என்று கூறியிருந்தார் என்றும், அதற்கு எனது தரப்பில் மறுஅறிவிப்பு ஏதேனும் அனுப்பினேனா என்றால், இல்லை.

7) எதிரி தரப்பில் அனுப்பிய பதில் வழக்கறிஞர் அறிவிப்பில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மை என்பதால்தான் மறு அறிவிப்பு என்னால் அனுப்பப்படவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கின் விசாரணைக்கு ஆஜராகும் முன்பு வரை எதிரியை எனக்கு யாரென்றே தெரியாது என்றால் சரியல்ல. எதிரிக்கு ரூ.5 லட்சம் கடனாக கொடுக்கும் அளவிற்கு எனக்கு வசதியில்லை என்றால் சரியல்ல. எனது வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றால் சரியல்ல. ம.சா.ஆ.1 காசோலையில் எதிரியின் கையொப்பம் ஒரு பேனா மையினாலும், மற்ற விவரங்கள் வேறொரு பேனா மையினாலும் நிரப்பப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ஒரே பேனாவினால் எழுதப்பட்டதுதான். ம.சா.ஆ.1 காசோலையில் P.மாரிஸ்வரகுமார் என்ற பெயரினை எழுதியது யார் என்றால், நான்தான் எழுதினேன். மற்ற விவரங்களை எதிரி நிரப்பினார். செல்வகுமார் என்பவருக்கு நிரப்பப்படாமல் எதிரியால் கொடுக்கப்பட்ட காசோலையை கொண்டு இந்த வழக்கு என்னால் பொய்யாக தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எனது அறிவிப்பு மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் காசோலை எங்கு வைத்து கொடுக்கப்பட்டது என்று சொல்லப்படவில்லை என்றால், சரியல்ல. சொல்லியுள்ளேன். எனது வீட்டில் வைத்துதான் காசோலை கொடுக்கப்பட்டது. வழக்கு காசோலை எனக்கு கொடுக்கப்படாததால் அது எங்கு வைத்து கொடுக்கப்பட்டது என அறிவிப்பு மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல.